**<u>சுருக்கம்</u>**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினர் நலம் – கல்வி – பொதுப் பரிசுகள் – பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்தி வழங்க அனுமதித்து ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(சிந2) துறை</u>**

**அரசு ஆணை (நிலை) எண். 6** **நாள். 18.1. 2012.**

**படிக்கப்பட்டது**

1. அரசு ஆணை(நிலை) எண்.56, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்.26.5.2008.
2. அரசு ஆணை(நிலை) எண்.57, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள்.13.7.2010.
3. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.டி2/5423/2011, நாள்.10.8.2011 மற்றும் 15.9.2011.

----

**<u>ஆணை</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூபாய்.3000/– வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூபாய்.2000/– வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூபாய்.1000/– வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று , 10–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட / சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்குமாக மொத்தம் 4 முதல் பரிசுகள் தலா ரூபாய்.1500/– வீதமும், 4 இரண்டாம் பரிசுகள் தலா ரூபாய்.1000/– வீதமும், 4 மூன்றாம் பரிசுகள் தலா ரூபாய்.500/– வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

2. 23.08.2011 அன்று நடைபெற்ற இத்துறையின் மானிய கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்) அவர்களால் சட்டமன்றப் பேரவையில் பொதுப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது மதிப்பெண்கள்

பெறும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையினை இரண்டு மடங்காக உயர்த்தி முறையே ரூ.3000/–, ரூ.2000/– மற்றும் ரூ.1000/– என்றும், ரூ.6000/–, ரூ.4000/– மற்றும் ரூ.2000/– என்றும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர்களை முன்னுதாரணமாக கொண்டு தற்போது இவ்வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த மாணவ / மாணவிகளும் சிறப்பாக கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் பொருட்டு அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்ட அளவில் தற்போது வழங்கப்பட்டு வரும் பரிசுத்தொகையினை மான்ய கோரிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டதற்கிணங்க இரு மடங்காக பின்வருமாறு உயர்த்தி வழங்கலாம் என கேட்டுக் கொண்டுள்ளார்:–

| வகுப்பு | நிலை | மாவட்ட அளவில் தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ. | மாவட்ட அளவில் இரு மடங்காக உயர்த்தி வழங்க பரிந்துரைக்கப்படும் பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 10 ஆம் வகுப்பு | முதல் பரிசு | 1500 | 3000 |
| | இரண்டாம் பரிசு | 1000 | 2000 |
| | மூன்றாம் பரிசு | 500 | 1000 |
| 12 ஆம் வகுப்பு | முதல் பரிசு | 3000 | 6000 |
| | இரண்டாம் பரிசு | 2000 | 4000 |
| | மூன்றாம் பரிசு | 1000 | 2000 |

இதனால் அரசுக்கு இரு துறைகளுக்கும் சேர்த்து ரூ.11.52 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

4. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்று வரும் நிதியாண்டு (2012–13) முதல் மாவட்ட அளவில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவதாக அதிக மதிப்பெண் பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கும், மிகப்பிற்டுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கும் பரிசுத் தொகைகளை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது:–

| வகுப்பு | நிலை | தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ. | உயர்த்தி வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 10 ஆம் வகுப்பு | முதல் பரிசு | 1500 | 3000 |
| | இரண்டாம் பரிசு | 1000 | 2000 |
| | மூன்றாம் பரிசு | 500 | 1000 |
| 12 ஆம் வகுப்பு | முதல் பரிசு | 3000 | 6000 |
| | இரண்டாம் பரிசு | 2000 | 4000 |
| | மூன்றாம் பரிசு | 1000 | 2000 |

5. மேற்கண்டவாறு பரிசுத் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.11,52,000/–க்கு (ரூபாய் பதினொன்று இலட்சத்து ஐம்பத்திரெண்டாயிரம் மட்டும்) 2012–2013 நிதியாண்டு வரவு செலவு திட்டத்தில் நிதியொதுக்கம் மேற்கொள்ளப்படும்.

6. மேற்படி பரிசுகள் வழங்குவதற்கு முன்னர் கல்வித் துறையால் வழங்கப்படும் பரிசுத் தொகை அல்லது இத்துறையால் வழங்கப்படும் பரிசுத் தொகை இதில் ஏதேனும் ஒன்று மட்டும் மாணவ / மாணவியருக்கு வழங்கப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும் என்று பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் ஆகியோர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

7. மேலே பத்தி 4–இல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை</u> (ரூ .5,76,000/–)

2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277. கல்வி – I . திட்டத்தில் சேராதது – BR – 8 வது வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி., மேல்நிலை வகுப்பு ஆகிய தேர்வுகளில் மிக அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் – 59 – பரிசுகளும், வெகுமதிகளும்.

(கு.தொ.கு.2225–03–277-BR–5909)

<u>மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை(ரூ.5,76,000/–)</u>

**2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277. கல்வி – I . திட்டத்தில் சேராதது – BU – 8 வது வகுப்பு, எஸ்.எஸ்.எல்.சி., மேல்நிலை வகுப்பு ஆகிய தேர்வுகளில் மிக அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் – 59 – பரிசுகளும், வெகுமதிகளும்.**

(து.தொ.கு.2225–03–277-BU–5903)

8. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.எண்.4/பிமிபி/12, நாள்.9.1.2012–ன்படி, அத்துறை இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கோ. சந்தானம்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை–5.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை,
சென்னை–5.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18/பெயரில்.
மாநில கணக்காயர் (துணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்காயர் (துணிக்கை–II), சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–5.
<u>நகல்:</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி(பி,மிபி.வ.செ.பொது.II)த் துறை, சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்